**செய்தி வெளியீடு எண்: 100** **நாள்: 04.02.2020**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் இன்று (4.2.2020) தலைமைச் செயலகத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் 19–வது IPCA உலக தனிநபர் சதுரங்க சாம்பியன்ஷிப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற செல்வி கே. ஜெனிதா ஆண்டோ அவர்களுக்கு உயரிய ஊக்கத் தொகையாக 20 லட்சம் ரூபாய்க்கான காசோலையும், 10–வது ஆசிய ஏஜ் குரூப் நீச்சல் சாம்பியன்ஷிப் போட்டியில் வெண்கலப் பதக்கங்கள் வென்ற செல்வன் பி. விக்காஸ், செல்வன் டி. ஆதித்யா மற்றும் செல்வி ஏ.வி. ஜெயவீணா ஆகியோருக்கு தலா 2 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளையும் வழங்கினார்கள்.

அகில இந்திய அளவிலும், பன்னாட்டு அளவிலும் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தமிழகத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கு கொண்டு வெற்றி வாகை சூடும் வகையில் அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்தல், உயரிய ஊக்கத் தொகை வழங்குதல், சர்வதேச அளவில் பங்கு பெறும் விளையாட்டு வீரர்களுக்கு நிதியுதவி அளித்தல், மாணவர்கள் தங்கி விளையாட்டில் பயிற்சி பெற விளையாட்டு விடுதிகள் ஏற்படுத்துதல், கிராமப்புற விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் வகையில் கிராம விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல், மாவட்ட விளையாட்டு மைதானங்களை மேம்படுத்துதல், பாரம்பரிய விளையாட்டுகளை ஊக்குவித்தல் போன்ற பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது.

அந்த வகையில், ஸ்லோவேகியா நாட்டின், ரூசும்பெரோக்கில் 27.6.2019 முதல் 7.7.2019 வரை நடைபெற்ற 19–வது IPCA உலக தனிநபர் சதுரங்க சாம்பியன்ஷிப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற செல்வி கே. ஜெனிதா ஆண்டோ அவர்களுக்கு உயரிய ஊக்கத் தொகையாக 20 லட்சம் ரூபாய்க்கான காசோலையும்;

கர்நாடக மாநிலம், பெங்களூருவில் 24.9.2019 முதல் 2.10.2019 வரை நடைபெற்ற 10–வது ஆசிய ஏஜ் குரூப் நீச்சல் சாம்பியன்ஷிப் போட்டியில், 4 x 100 மீட்டர் ஃப்ரி ஸ்டைல் நீச்சல் போட்டியில் வெண்கலப் பதக்கங்கள் வென்ற செல்வன் பி. விக்காஸ் மற்றும் செல்வன் டி. ஆதித்யா மற்றும் 4 x 200 மீட்டர் ஃப்ரி ஸ்டைல் நீச்சல் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற செல்வி ஏ.வி. ஜெயவீணா ஆகியோருக்கு தலா 2 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளையும்;

என மொத்தம் 26 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வெற்றி பெற்ற 4 விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் இன்று வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு பள்ளிக்கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு கே.ஏ.செங்கோட்டையன், தலைமைச் செயலாளர் திரு.க. சண்முகம், இ.ஆ.ப., இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை முதன்மைச் செயலாளர் (முழு கூடுதல் பொறுப்பு) திரு. பிரதீப் யாதவ், இ.ஆ.ப., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் முதன்மைச் செயலாளர் / உறுப்பினர் செயலர் திரு. ரமேஷ் சந்த் மீனா, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9